# <u>பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்</u>

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1–ன் கீழ் மனுதாரர் / எதிர்மனுதாரர் தரப்பு 1ஆவது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2026–ஆம் ஆண்டு **மார்ச்** திங்கள் **11** ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்...................................................................... | கிராமம்................................................................ |
| தந்தை/கணவர் பெயர்.......................................... | தாலுக்கா............................................................ |
| தொழில்.................................................................. | மாவட்டம்.......................................................... |

---

# LAOP No. 371/2022, LAOP No. 372/2022, LAOP No. 373/2022

# 11.03.2026

**ம.த.சா.1 – திரு. ராஜேஷ் த/பெ. முத்துராமன்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சென்னை, கிழக்கு தாம்பரத்தில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. நான் LAOP No.371/2022, LAOP No. 372/2022, LAOP No. 373/2022 ஆகிய மனுக்களில் கோரிக்கைதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. 18.07.2012 தேதியிட்ட ARR Charitable Trust பெயரில் உள்ள ஆவண எண்.528/2012 கொண்ட கிரயப்பத்திரத்தின் அசல் **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 11.06.2015 தேதியிட்ட மனுதாரர் பெயரில் உள்ள ஆவண எண். 5526/2015 கொண்ட கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. கணினியில் இருந்து எடுக்கப்பட்ட 23.05.2020 தேதியிட்ட நில ஆணையர், சேப்பாக்கம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை **ம.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 22.04.2021 தேதியிட்ட தீர்வம் எண். 1/2021 **ம.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கணினியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட மனு சொத்தின் வழிகாட்டுதல் மதிப்பு **ம.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. சர்வே எண். 51/1ஏ2, 51/1பி2, 51/3ஏ2, 51/3பி2க்கான புல வரைபடம் நகல் **ம.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. ARR Charitable Trust பெயரில் உள்ள கட்டிட வரைபடம் மற்றும் கட்டிட அனுமதி கடிதம் நகல் **ம.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. தாவா சொத்தினை சுற்றியுள்ள இடங்களை காட்டும் புல வரைபட நகல் **ம.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா இடங்களைக் காட்டும் செயற்கைகோள் வரைபடம் **ம.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. தாவா நிலங்களுக்கான புகைப்படங்கள் (8 எண்ணிக்கை)மற்றும் அதற்கான Pendrive உடன் **ம.த.சா.ஆ.10** வரிசையாக ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 08.12.2025 தேதியிட்ட சார்பதிவாளர், செங்குன்றம் அவர்கள் அளித்துள்ள வழிகாட்டுதல் மதிப்பு குறித்த கடிதம் நாகா எண்.869/2025 **ம.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. 16.08.2013 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 9596/2013) **ம.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. 31.10.2018 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 9307/2018) **ம.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14. 22.10.2012 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண் 12527/2012) **ம.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(ம.த.சா.ஆ.3 முதல் ம.த.சா.ஆ.8 வரையுள்ள ஆவணங்கள் நகல்கள் என்பதால் அரசு தரப்பில் ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

**மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.